# <u>இயல்பு கூட்டப்பொருள்</u>

1. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9-இல் கிருஷ்ணன்கோவில் சன்னதி தெருவில் சானல் கிராஸ் கல்வெர்ட் ஒரு பக்கம் பழுதடைந்துள்ளதால் பழுதடைந்தநிலையில் உள்ள கிராஸ் கல்வெர்ட்டை புதியதாக கட்டுதல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.6,20,000/-க்கு (ரூபாய் ஆறு இலட்சத்தி இருபதாயிரம்) பொது நிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/17429/2024

**தீர்மானம் எண். 924 நாள்.20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

2. இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலர், அரசு துணைச் செயலாளர், சென்னை அவர்களின் ஆணையின்படி அரசு பொருட்காட்சியினை 6 மாவட்ட தலைநகரங்களில் மற்றும் 4 மாவட்டங்களில் சுழற்சி முறையில் நடத்திட தெரிவித்ததின் அடிப்படையில் அரசு பொருட்காட்சியினை சுழற்சி முறையில் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் மாநகராட்சிக்கு சொந்தமான மகாராஜா ஸ்ரீஅவிட்டம் திருநாள் நினைவு மாநகராட்சி காப்பக மைதானத்தில் 01.12.2024 முதல் 31.01.2025 வரை நடத்த தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே மேற்படி அரசு பொருட்காட்சியினை நடத்திட ஏதுவாக மாநகராட்சிக்கு சொந்தமான மகாராஜா ஸ்ரீஅவிட்டம் திருநாள் நினைவு மாநகராட்சி காப்பக மைதானத்தை ஒதுக்கீடு செய்து தர செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களின் கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது. மேலும் அரசு ஆணை நிலை எண்- 924, செய்தி சுற்றுலா மற்றும் (தமிழ் பண்பாட்டு (பொருட்காட்சி) துறை, நாள்–23.10.1983-இல் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் அரசு பொருட்காட்சிகள் நடைபெறும் போது கிடைக்கும் நிகர இலாபத்தில் 50 சதவீதம் பங்கினை மாநகராட்சிக்கு கொடுக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே தமிழ்நாடு அரசின் சாதனைகள் நலத்திட்டங்களை பொதுமக்கள் அறிந்து பயன்பெரும் வகையில் மாநகராட்சிக்கு சொந்தமான மகாராஜா ஸ்ரீஅவிட்டம் திருநாள் நினைவு மாநகராட்சி காப்பக மைதானத்தில் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து கண்காட்சி அரங்குகள் அமைத்து அரசு பொருட்காட்சி நடத்த ஏதுவாக எதிர்வரும் 01.12.2024 முதல் 31.03.2025 வரை மைதானத்தை ஒதுக்கீடு செய்து தரவும், மேலும் அரசு பொருட்காட்சியில் கிடைக்கும் நிகர இலாபத்தில் 50 சதவீதம் மாநகராட்சிக்கு வழங்கப்படும் என

தெரிவித்து செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாகர்கோவில் அவர்கள் கடிதம் மூலம் கோரியுள்ளார்கள்.

எனவே அரசு பொருட்காட்சி நிகழ்ச்சி நடத்திட 01.12.2024 முதல் 31.01.2025 வரை மாநகராட்சிக்கு சொந்தமான மகாராஜா ஸ்ரீஅவிட்டம் திருநாள் நினைவு மாநகராட்சி காப்பக மைதானத்தை வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> –

1. அனுமதிக்கலாம்.
2. மேற்கண்டுள்ள அரசு பொருட்காட்சி நடத்திட உத்தரவு வழங்கிடும் பொருட்டு அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி வணக்கத்திற்குறிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று அனுமதி வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்

கோப்பு எண் – 26072/2017/அ8

**தீர்மானம் எண். 925 நாள்.20.12.2024** 01.02.2025 முதல் 31.03.2025 வரை என்ற திருத்தத்துடன் அனுமதிக்கப்பட்டது.

3. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14-இல் டென்னிசன் சாலையின் இருபுறமும் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7,90,000/-க்கு (ரூபாய் ஏழு இலட்சத்தி தொண்ணூறாயிரம்) பொது நிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/17432/2024

**தீர்மானம் எண். 926 நாள்.20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

4. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14-இல் அருந்ததியர் காலனி அம்பேத்கார் நகரில் அமைந்துள்ள சின்டெக்ஸ் டேங்க் தளம் மற்றும் மழைநீர் வடிகால் ஓடையின் மேல் அமைந்துள்ள கவர்சிலாப் பழுதடைந்துள்ளதால் அதனை சீர்செய்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,75,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி எழுபத்தி ஐந்தாயிரம்) பொது நிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/16881/2024

**தீர்மானம் எண். 927 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

5. கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:R0OGHTUI/2024/TCP/2024/TCP,

நாள்:19.11.2024-இன்படி இம் மாநகராட்சிக்குட்பட்ட நீண்டகரை ‘A’ கிழக்கு கிராமம் புல எண்:302/2 B-இல் 2469.00 ச.மீ. (0.610 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனை பிரிவிற்கு திரு. R. லிங்கராஜன் மற்றும் இரண்டு நபர்கள் ஒப்புதல் வழங்க கேட்டதை தொடர்ந்து மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் SWP/ம.வ/நாஉ.திகு. எண்:47/2024-இன்படி தொழில் நுட்ப அனுமதியும் மற்றும்59/2024-இன்படி திட்ட அனுமதியும் வழங்கப்பட்டு உத்தேச மனைப்பிரிவிற்கு மாநகராட்சி விதிகள் மற்றும் வழிமுறைகளை பின்பற்றி இறுதி ஒப்புதல் பெற்றுக் கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி பொறியாளரின் அறிக்கையின் படி மேற்படி மனைப்பிரிவில் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் தெருவிளக்குகள், குடிநீர் வசதி மற்றும் பாதாள சாக்கடை பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.4,00,000/- மற்றும் சாலை பராமரிப்புக்கான வைப்புத் தொகை ரூ.1,00,000/- ஆகியவை மாநகராட்சிக்கு செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவு நிபந்தனைகளின் படி சாலை மற்றும் மூலை முடுக்குகள், பூங்கா மற்றும் உள்ளாட்சி ஒதுக்கீடு 612.51 ச.மீ பரப்பளவு இடத்திற்கான தான பத்திரம் எண்:4247/2024 நாள்:15.11.2024-இன் படி பத்திர பதிவு அலுவலகத்தில் பதிவு செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் 1998 பிரிவு 120(4)-இன் படி தானபத்திரம் மூலம் பெறப்பட்டுள்ள சாலை மற்றும் உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு பகுதியினை மாநகராட்சியின் பொறுப்பில் பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ளவும் மேற்கண்டவாறு மதிப்பீட்டு தொகை மற்றும் கட்டணங்கள் செலுத்திய பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு:

அனுமதி வழங்கலாம். கோப்பு எண்.எப்1/17363/2024

**தீர்மானம் எண். 928 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

6. நாகர்கோவில் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.46 வடக்கு சூரங்குடி தெருவில் அமைந்துள்ள வரிவிதிப்பு எண்கள்.150/046/9002237, 150/046/902238, 150/046/902239, 150/046/902239, 150/046/902240, 150/046/902241, 150/046/902242 ,150/046/902243 கொண்ட கட்டிடம் திரு C.தியாகராஜன் பெயரில் உள்ளது. மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரி நிர்ணயம் செய்தபொழுது கட்டிடத்தின் உரிமையாளரால் நாகர்கோவில் மாநகராட்சியில் பெறப்பட்ட கட்டிட அனுமதி வரைபட நகல் சமர்ப்பிக்காத காரணத்தினால் அபராத தொகையுடன் சேர்த்து சொத்துவரி விதிக்கப்பட்டது. வரிவிதிப்பு செய்யப்பட்டபின் மனுதாரர் திரு C.தியாகராஜன் என்பவர் வரைபட நகல் உள்ளது என்றும் அபராதத்தொகையை நீக்கம் செய்திட கேட்டு மனு

அளித்ததால் கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டு கட்டிட அனுமதி நகலுடன் ஒப்பிட்டு மறு அளவீடு செய்யப்பட்டது. அதனடிப்படையில் 2023-2024-I அரையாண்டு முதல் சொத்துவரி நிர்ணயம் செய்திடவும், மேலும் கீழ்கண்ட விவரப்படி சொத்துவரி விதிப்பு எண்கள். கொண்ட கட்டிடத்தின் பேரிலான கடந்தகால அபராதத்துடன் 2023-2024 I அரையாண்டு முதல் 2024-2025 இரண்டாம் அரையாண்டு வரை உள்ள கேட்பு நிலுவைத்தொகை ரூ.39,131/-ஐ "வஜா" செய்திடவும் மாமன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எ | கதவு எண் | சொத்துவரி விதிப்பு எண்கள் | நிலுவைத்தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 9/11-1 | 150/046/902237 | 5672 |
| 2. | 9/11-2 | 150/046/902238 | 5672 |
| 3 | 9/11-3 | 150/046/902239 | 5672 |
| 4 | 9/11-4 | 150/046/902240 | 5672 |
| 5 | 9/11-5 | 150/046/902241 | 5481 |
| 6 | 9/11-6 | 150/046/902242 | 5481 |
| 7 | 9/11-7 | 150/046/902243 | 5481 |
| | | மொத்தம் | 39,131 |

அலுவலக குறிப்பு –

அனுமதிக்கலாம் கோப்பு எண்.12889/2024/அ2

**தீர்மானம் எண். 929 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

7. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14-இல் உள்ள வடசேரி பேருந்து நிலையத்தில் புதியதாக 8 கடைகள் கட்டுவதற்கு ரூ.48,00,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஆணையரின் ஒப்புதல் கோரியதில் புதியதாக 8 கடைகள் கட்டுவதால் மாநகராட்சிக்கு கிடைக்கும் வருவாய் குறித்த அறிக்கை சமர்பிக்க வருவாய் பிரிவின் குறிப்பு வழங்க கோரப்பட்டதன் படி வருவாய் பிரிவின் குறிப்பில் 8 கடைகளுக்கும் பொது ஏலம்விடும் பட்சத்தில் ஒரு வருடத்தில் ரூ.46,40,000/-வரை மாநகராட்சிக்கு வருவாய் கிடைக்க வாய்ப்பு உள்ளதாக குறிப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே தற்போது அனுமதி எதிர்நோக்கும் 8 கடைகள் கட்டுவதற்கு ஆகும் மதிப்பீடு தொகை ரூ.48,00,000/- (ரூபாய் நாற்பத்தி எட்டு இலட்சம்) வருவாய் பிரிவின் குறிப்பின் படி சுமார் ஒரு வருட காலத்தில் மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டி விடும் என்பதாலும் ஏனைய வருடத்தில் பெறப்படும் வருவாய் மாநகராட்சிக்கு கூடுதல் வருவாய் என்பதால் 8

கடைகள் கட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.48,00,000/-ற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/17426/2024

**தீர்மானம் எண். 930 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

8. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19-ல் வசந்தம் நகர் பகுதி மற்றும் கிரேஸ் நகரில் மின் பாதை அமைத்து 15 புதிய தெருவிளக்குகள் அமைக்கவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்காக

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ4/17988/2024

**தீர்மானம் எண். 931 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

9. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18-ல் ஸ்ரீ கிருஷ்ணா கார்டன் பகுதியில் புதியதாக மின்பாதை அமைத்து 12 எண்ணம் தெருவிளக்குகள் அமைத்திடவும் அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்காக

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ4/13239/2024

**தீர்மானம் எண். 932 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

10. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20-ல் அனந்தனார் குளம் இசக்கி குறுக்கு தெருவில் ஏற்கனவே உள்ள மின்கம்பத்தில் மின் பாதை அமைத்து 8 எண்ணம் புதிய தெருவிளக்குகள் அமைக்க உத்தேச செலவு தொகை ரூ.1,50,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம்) மாமன்றத்தின் அனுமதிக்காக

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ4/100/2024

**தீர்மானம் எண். 933 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

11. கன்னியாகுமரி மாவட்டத்தில் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு 25 வருடத்தினையொட்டி வெள்ளி விழா கொண்டாட்டம் 3 நாட்கள் அரசு விழாவாக கொண்டாடப்படவுள்ளதால் அதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தந்து சிறப்பிக்கப்படவுள்ளதால் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் Sign boards அமைத்திட மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களால் 02.12.2024 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தின் வழியாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போதிய Sign boards இல்லாத காரணத்தினால் Sign boards இல்லாத பகுதிகளில் Sign boards -கள் அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.15,00,000/-க்கு (ரூபாய் பதினைந்து

இலட்சம்) அனுமதியும், பணியின் அவசர அவசியம் மற்றும் முக்கியத்துவம் கருத்தில் கொண்டு மாமன்ற மேயரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்காக

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/18348/2024

**தீர்மானம் எண். 934 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

12. அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு 25 வருடம் நிறைவடைவதையொட்டி கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் வெள்ளிவிழா கொண்டாட்டம் 30.12.2024,31.12.2024 மற்றும் 01.01.2025 அன்று சிறப்பாக நடைபெற இருப்பதால் மேற்படி விழாவிற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மிக முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ள இருப்பதாலும் நாகர்கோவிலின் மிக முக்கிய பிரதான சாலையான வார்டு எண்.30 கோபாலபிள்ளை மருத்துவமனை முதல் செட்டிகுளம் சந்திப்பு வரையுள்ள மழைநீர் வடிகால் ஓடை பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்திட மாநகராட்சி ஆணையர் மற்றும் மாநகர பொறியாளரின் அறிவுரைப்படி மேற்படி பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9,90,000/-க்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்தி தொண்ணூறாயிரம்) அனுமதியும், பணியின் அவசர அவசியம் மற்றும் முக்கியத்துவம் கருத்தில் கொண்டு மாமன்ற மேயரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/18349 /2024

**தீர்மானம் எண். 935 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

13. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14-இல் திரட்டு தெருவில் NUHM திட்டத்தின்கீழ் துணை சுகாதார நிலைய கட்டிடத்தில் (HSC) பணிகள் முடிக்கப்பட்டுள்ளதால் இக் கட்டிடத்தினை சுற்றிலும் சுற்றுச்சுவர் மற்றும் பேவர் பிளாக், பிளாட்பார்ம் அமைத்தல் பணிக்கு ரூ.3,80,000/-க்கு மாமன்ற தீர்மானம் எண்.879 நாள். 29.11.2024-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி 06.12.2024 அன்று E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் விவரம் பின்வருமாறு.

<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>

| வ. எண் | மதிப்பீட்டின் படி ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலைவிகிதம் | |
|---|---|---|---|---|
| | | | அதிகம் | குறைவு |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | 309614.78 | 1.K.மணிகண்டன்<br><br>2. K.நடராஜன் | -<br><br>4.86 (+)<br>(ரூ.324666.30) | 0.13%(-)<br>(ரூ.309206.00) |

மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.13% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருK.மணிகண்டன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/17196/2024

**தீர்மானம் எண். 936 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

14. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28-இல் குறுந்தெரு பூங்கா சாலையில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் சாலை குறுகலாகவும் அருகில் மழைநீர் வடிகால் ஓடையும் உள்ளது. இதனால் வாகனங்கள் விபத்திற்குள்ளாக கூடிய சூழல் உள்ளது. எனவே அதனை தடுக்கும் பொருட்டு அப்பகுதியில் ஒரு தடுப்பு வேலி அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,00,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சம்) நிர்வாக அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/17195/2024

**தீர்மானம் எண். 937 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

15. இம் மாநகராட்சிக்குட்பட்ட வாட்டர் டேங்க் ரோட்டில் அமைந்துள்ள மேல் நிலை நீர்தேக்க தொட்டி வளாகம் மற்றும் சர்.சி.பி ராமசாமி பூங்கா வளாகத்திலும் உள்ள பழுதடைந்த SS Dumber bin 23 எண்ணம் பழுது நீக்கி பயன்பாட்டிற்கு கொண்டு வர தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3,45,000/-க்கு (ரூபாய் மூன்று இலட்சத்தி

நாற்பத்தி ஐந்தாயிரம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/ 18551 /2024

**தீர்மானம் எண். 938 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

16. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.49-இல் கீழகுஞ்சன் விளையில் (முத்தாரம்மன் கோவில் தெருவில்) பேவர்பிளாக் சாலை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,40,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி நாற்பதாயிரம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/17070/2024

**தீர்மானம் எண். 939 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

17. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.38-இல் கேப் சாலை மற்றும் தமிழ்நாடு மெர்க்கண்டல் வங்கி முன்புறம் உள்ள ஓடை மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனை சீரமைத்து வடிகால் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,60,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி அறுபதாயிரம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/18397/2024

**தீர்மானம் எண். 940 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

18. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.42-இல் இருளப்பபுரம் அங்கன்வாடி மையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.70,000/-க்கு (ரூபாய் எழுபதாயிரம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/18152/2024

**தீர்மானம் எண். 941 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

19. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.47-இல் கீழசரக்கல்விளை பகுதியில் உள்ள சிறுபாலத்தில் Deck slab அமைக்கவும் மேலும் பம்ப்ரூமை பராமரிப்பு செய்யவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.50,000/-க்கு (ரூபாய் ஐம்பதாயிரம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/6244/2023

**தீர்மானம் எண். 942 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

20. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18-இல் பள்ளவிளை சர்ச் வளாகத்தில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டிடத்தில் கழிப்பறை கட்டடம் சேதமடைந்துள்ளதால் குடிநீர் மற்றும் மின்வசதி செய்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,35,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி முப்பத்தி ஐந்தாயிரம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/ 18552/2024

**தீர்மானம் எண். 943 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

21. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4-இல் வெள்ளாளர் குறுக்கு தெருவில் புதியதாக பேவர் பிளாக் சாலை அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,30,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி முப்பதாயிரம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/18553 /2024

**தீர்மானம் எண். 944 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

22. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.40-இல் பறக்கை சந்திப்பு அரசு தொடக்கப்பள்ளியில் புதியதாக கழிப்பிடம் கட்டுதல் மற்றும் பள்ளிகூடத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7,80,000/-க்கு (ரூபாய் ஏழு இலட்சத்தி எண்பதாயிரம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/ 18549/2024

**தீர்மானம் எண். 945 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

23. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.41-இல் வட்டவிளை அரசு நடுநிலைப்பள்ளியில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு

தொகை ரூ.3,60,000/-க்கு (ரூபாய் மூன்று இலட்சத்தி அறுபதாயிரம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/ 18550/2024

**தீர்மானம் எண். 946 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

24. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.48-இல் இடலாக்குடி அரசு தொடக்கப்பள்ளியில் பழுதடைந்துள்ள பள்ளி கட்டிடத்தினை சீரமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8,70,000/-க்கு (ரூபாய் எட்டு இலட்சத்தி எழுபதாயிரம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/18548 /2024

**தீர்மானம் எண். 947 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

25. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5-இல் கட்டையன் விளை பகுதியில் குறுக்கு பாலம் சேதமடைந்த நிலையில் உள்ளதால் குறுக்கு பாலம் கட்டுவதற்கும் 7th day குறுக்கு சாலையில் மழைகாலத்தில் மழைநீர் தேங்குவதால் Leach pit அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,00,000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/7973/2024

**தீர்மானம் எண். 948 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

26. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.44-இல் செயின்ட் சேவியர் தெருவில் சிமெண்ட் தளம் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,40,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி நாற்பதாயிரம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/18617/2024

**தீர்மானம் எண். 949 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

27. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.39-இல் ராஜபாதை தெருவில் சிறுபாலங்கள் சாலை மட்டம் உயர்ந்து தாழ்வாக உள்ளதால் தண்ணீர் சரியாக வெளியேற வழியில்லாமல் உள்ளது. மேற்படி சிறுபாலத்தினை சீரமைக்க தயார் செய்யப்பட்ட

மதிப்பீடு தொகை ரூ.1,50,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி ஐம்பதாயிரம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம்.                                  கோப்பு எண்.இ1/18616/2024

**தீர்மானம் எண். 950 நாள். 20.12.2024**     அனுமதிக்கப்பட்டது.

28. இம் மாநகராட்சிக்குட்பட்ட கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 24, 25, 26, 27, 28, 29, 38, 39, 40, 41, 42, 47 மற்றும் 48 ஆகிய வார்டுகளில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திட ஏதுவாக வருடாந்திர பராமரிப்பு பணி (AMC) ரூ.8,00,000/- மதிப்பீடு தயார்செய்யப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா கொண்டாட்டத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகை தரஇருப்பதால் மேற்படி மாநகராட்சிகுட்பட்ட வருகை தரும் பகுதிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்பதால் கிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட ஒதுக்கீடு செய்யப்பட்ட வருடாந்திர பராமரிப்பு பணி ரூ.8,00,000/- அனுமதிக்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.

எனவே மேற்படி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.24, 25, 26, 27, 28, 29, 38 , 39, 40, 41, 42, 47 மற்றும் 48 ஆகிய வார்டுகளில் பாரமரிப்பு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள மேற்படி வார்டுகளில் உள்ள கட்டிடங்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் நோக்கிலும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.40,00,000/-க்கு (ரூபாய் நாற்பது இலட்சம்) மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம்.                                  கோப்பு எண்.இ1/18623/2024

**தீர்மானம் எண். 951 நாள். 20.12.2024**     அனுமதிக்கப்பட்டது.

29. இம் மாநகராட்சிக்குட்பட்ட கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 24, 25, 26, 27, 28, 29, 38, 39, 40, 41, 42, 47 மற்றும் 48 ஆகிய வார்டுகளில் உள்ள தார்சாலை, சிமெண்ட் சாலை, பேவர் பிளாக் சாலை மற்றும் மழைநீர் வடிகால் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திட ஏதுவாக வருடாந்திர பராமரிப்பு பணி (AMC) ரூ.17,00,000/- மதிப்பீடு தயார்செய்யப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா கொண்டாட்டத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகை தரஇருப்பதால்

மேற்படி மாநகராட்சிகுட்பட்ட வருகை தரும் பகுதிகளில் உள்ள சாலைகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்பதால் கிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட ஒதுக்கீடு செய்யப்பட்ட வருடாந்திர பராமரிப்பு பணி ரூ.17,00,000/- அனுமதிக்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.

எனவே மேற்படி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 24, 25, 26, 27, 28, 29, 38, 39, 40, 41, 42, 47 மற்றும் 48 ஆகிய வார்டுகளில் உள்ள சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் நோக்கிலும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.40,00,000/-க்கு (ரூபாய் நாற்பது இலட்சம்) மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/18622/2024

**தீர்மானம் எண். 952 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

30. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.41-இல் வட்டவிளையில் PMJVK திட்டத்தின் கீழ் சமூக நலக்கூடம் கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. எனவே அதனை பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு அதனை சுற்றிலும் சுற்றுச்சுவர் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.12,80,000/-க்கு (ரூபாய் பன்னிரண்டு இலட்சத்தி எண்பதாயிரம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/ 13468/2024

**தீர்மானம் எண். 953 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

31. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17-இல் கிறிஸ்து தெருவில் மழைநீர் தேங்கி அப்பகுதியில் போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளதால் மேற்படி பகுதியில் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு சிமெண்ட் தளம் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,75,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி எழுபத்தி ஐந்தாயிரம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/18621/2024

**தீர்மானம் எண். 954 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

32. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19-இல் ஆசாரிபள்ளம் புனித மிக்கேல் தொடக்கப்பள்ளி பின்புறம் சாலை சேதமடைந்து பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் அப்பகுதியில் சிமெண்ட் தளம் அமைப்பதற்கு தயார்

செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3,50,000/-க்கு (ரூபாய் மூன்று இலட்சத்தி ஐம்பதாயிரம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/ 17482 /2024

**தீர்மானம் எண். 955 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

33. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19-இல் ஆசாரிபள்ளம் அம்மா உணவகத்தில் கழிவறை பராமரிப்பு பணி, Soak pit அமைத்தல், மின்பணி, குக்கர், கிரைண்டர், தராசு ஆகியவற்றில் பழுதினை சரி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,98,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி தொண்ணூற்றி எட்டாயிரம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/18620/2024

**தீர்மானம் எண். 956 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

34. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.45-இல் மேலசூரங்குடியில் மழைநீர்வடிகால் ஓடை முற்றிலும் சேதமடைந்துள்ளதால் மேற்படி பகுதியில் மழைநீர் வடிகால் ஓடை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,50,000/-க்கு (ரூபாய் நான்கு இலட்சத்தி ஐம்பதாயிரம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/ 17627 /2024

**தீர்மானம் எண். 957 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

35. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.46-இல் வடக்குசூரங்குடி கம்பியூட்டர் தெருவில் உள்ள சாலை முற்றிலும் சேதமடைந்து பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக இருப்பதால் அப்பகுதியில் சிமெண்ட் தளம் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,90,000/-க்கு (ரூபாய் நான்கு இலட்சத்தி தொண்ணூறாயிரம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/ 18451 /2024

**தீர்மானம் எண். 958 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

36. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.50-இல் SM நகரில் உள்ள பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள சாலையில் மழைகாலங்களில் பல இடங்களில் (தாழ்வாக உள்ள

பகுதிகளில்) மழைநீர் தேங்கி பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக இருப்பதால் அப்பகுதியில் Wet Mix கலவையால் ஒட்டுப் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.87,000/-க்கு (ரூபாய் எண்பத்தி ஏழாயிரம்) பொதுநிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/ 8841 /2024

**தீர்மானம் எண். 959 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

37. இம் மாநகராட்சி நான்கு மண்டலங்களிலும் உள்ள குடிநீர்பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திட ஏதுவாக வருடாந்திர பராமரிப்பு பணி (AMC) (குடிநீர் நிதி2024-25) மூலம் மேற்கொள்ள கீழ்காணும் விவரப்படி தனித்தனியே மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | இம் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.24,25,26,27,28, 29,38,39,40,41,42,47 மற்றும் 48 ஆகிய வார்டுகளில் உள்ள குடிநீர்பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திட ஏதுவாக வருடாந்திர பராமரிப்பு பணி (AMC) மூலம் (குடிநீர் நிதி 2024-25) மேற்கொள்ளுதல் | ரூ.35,00,000/- |
| 2 | இம் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.1,2,3,4,17,18,19,20,21,30,31, மற்றும் 32 ஆகிய வார்டுகளில் உள்ள குடிநீர்பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திட ஏதுவாக வருடாந்திர பராமரிப்பு பணி (AMC) மூலம் (குடிநீர் நிதி 2024-25) மேற்கொள்ளுதல் | ரூ.42,50,000/- |
| 3 | இம் மாநகராட்சிக்கு சொந்தமான வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.5,6,7,8,9,10,11, 12,13,14,15,16,22 மற்றும் 23 ஆகிய வார்டுகளில் உள்ள குடிநீர்பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திட | ரூ. 35,00,000/- |

| | | |
|---|---|---|
| | ஏதுவாக வருடாந்திர பராமரிப்பு பணி (AMC) மூலம் (குடிநீர் நிதி 2024-25) மேற்கொள்ளுதல் | |
| 4 | இம் மாநகராட்சிக்கு சொந்தமான தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.33,34,35,36,37, 43,44,45,46,49,50,51 மற்றும் 52 ஆகிய வார்டுகளில் உள்ள குடிநீர்பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திட ஏதுவாக வருடாந்திர பராமரிப்பு பணி (AMC) மூலம் (குடிநீர் நிதி 2024-25) மேற்கொள்ளுதல் | ரூ. 35,00,000/- |

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ2/18523 /2024

**தீர்மானம் எண்.960 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

38. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் MCC centre மற்றும் Bill collection centre பகுதிகளில் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு புதியதாக R.O Plant அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3,75,000/-க்கு (ரூபாய் மூன்று இலட்சத்தி எழுபத்தி ஐந்தாயிரம்) குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ2/18527/2024

**தீர்மானம் எண். 961 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

39. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2- ல் பனவிளை மேல் நிலை நீர்த்தேக்க தொட்டியில் பழுதடைந்துள்ள குடிநீர் குழாயினை மாற்றி புதிதாக அப்பகுதியில் 80mm GI pipe லைன் அமைத்தல் பணிக்கு ரூ.5,82,000/-க்கு மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதியின் படி 20.11.2024 அன்று E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | மதிப்பீட்டின் படி ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலைவிகிதம் | |
|---|---|---|---|---|
| | | | அதிகம் | குறைவு |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | 487797.00 | 1.JLG Engineering Pvt Ltd | - | 0.24%(-) (ரூ.486597.00) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2.ABBS Infrastructure Pvt Ltd | 0.57(+) (ரூ.490597.00) | |

மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.24% குறைவாக கொடுத்துள்ள JLG Engineering Pvt Ltd நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், வேலை உத்தரவு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். மதிப்பீட்டு எண்.இ2/208/2024-25

**தீர்மானம் எண். 962 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

40. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 -இல் கிறிஸ்து நகர் ரோட்டில் படிப்பக வளாகத்தில் அமைந்துள்ள பழுதடைந்த குடிநீர் தேக்க தொட்டியினை இடித்து அந்த இடத்தில் புதியதாக சமூக நலக்கூடம் அமைக்க மதிப்பீடு எண்.519/2023-24 மாமன்ற தீர்மானம் எண்.395 நாள். 27.06.2024 -ன் படி அனுமதிக்கப்பட்டு ஒப்பந்ததாரர் திரு. எம். முருகதாஸ் என்பவருக்கு பணியாணை வழங்கப்பட்டுள்ளது. அதற்கு முன் ஏற்பாடாக அந்த இடத்தில் உள்ள உபயோகமில்லாத கிணற்றினை இடித்து மண் நிரப்பவும் கிறிஸ்து நகர் ரோட்டில் ஒரு மேல்நிலை நீர்தேக்க தொட்டியினை பழுதுபார்க்கவும் மற்றும் இம்மானுவேல் நகர் (கோல்டன் நகரில்) ஒரு உறிஞ்சு கிணறு அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,00,000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சம்) குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ2/18399/2024

**தீர்மானம் எண். 963 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

41. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8-இல் மேலதெரு கரை பகுதியில் குடிநீர் விநியோம் செய்ய மெயின் இல்லை. மேலும் அறுகுவிளை குறுக்கு தெருவில் பத்தாண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட பழைய குடிநீர் விநியோக மெயின் லைன் முற்றிலும் பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே புதிய குடிநீர் பைப் லைன் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,50,000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்தி ஐம்பதாயிரம்) குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ2/ 18165/2024

**தீர்மானம் எண். 964 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

42. நாகர்கோவில் மாநகராட்சி எல்லை பகுதியில் அமைந்துள்ள சுசீந்திரம் வேம்பனூர்-தேரூர் குளத்தில் பறவைகள் சரணாலயம் மற்றும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள EMAT திட்டத்தின் கீழ் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து The Member Secretary, Environment Management Agency of Tamil Nadu (EMAT) Chennai அவர்களின் செயல்முறை ஆணை எண்.Proc.No.1606/EMAT/2024-1, dt.25.10.2024-ல் நிர்வாக அனுமதி வழங்கப் பட்டுள்ளது. தொழில்நுட்ப அனுமதி வேண்டி தலைமை பொறியாளர்/ நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி குளத்தில் பறவைகள் சரணாலயம் மற்றும் அபிவிருத்தி பணிகள் நீர்வள ஆதாரத்துறையிடம் தடையின்மை சான்று பெற்று பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு:

அனுமதிக்கலாம் கோப்பு எண்.13571/இ3 /2024

**தீர்மானம் எண். 965 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

43. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16-ல் கேபி ரோட்டில் 3 அடி வீதி உள்ள தெருவின் முகப்பில் அமைந்துள்ள மின் கம்பம் எண்.W16/8 மிகவும் குறுகலான 3 அடி பாதையில் உள்ளதால் அதனை சுமார் 4 அடி தூரம் மாற்றி இரு சந்து தெருக்களிலும் இணையும் விசாலமான இடத்தில் அமைப்பதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்காக

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ4/100/2024

**தீர்மானம் எண். 966 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

44. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14-இல் மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி கனகமூலம் சந்தை நுண் உர செயலாக்க மையத்தில் அரவை இயந்திரம் மற்றும் மின் விசிறிகள் பழுதாகி உள்ளதால் அதனை சரி செய்யவும், மேலும் வார்டு எண். 13-இல் ராஜபாதை நுண் உர செயலாக்க மையத்தில் கழிவறைகள் மற்றும் மோட்டார்கள் பழுதடைந்துள்ளதை சரி செய்யவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5,50,000/-க்கு (ரூபாய் ஐந்து இலட்சத்தி ஐம்பதாயிரம்) நிர்வாக அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/13055/2024

**தீர்மானம் எண். 967 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

45. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23-இல் செட்டிகுளம் சந்திப்பு முதல் ஜெபமாலை திருமணமண்டபம் செல்லும் சாலை வரை உள்ள மழைநீர்வடிகால் பழுது அடைந்துள்ளதால் மாநகராட்சி ஆணையர் மற்றும் மாநகராட்சி பொறியாளர் அவர்களின் அறிவுரைப்படி மேற்படி பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9,90,000/-க்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்தி தொண்ணூறாயிரம்) அனுமதியும், பணியின் அவசர அவசியம் மற்றும் முக்கியத்துவம் கருத்தில் கொண்டு மாமன்ற மேயரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/18347 /2024

**தீர்மானம் எண். 968 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

46. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான கடைகளில் கீழ்காணும் பட்டியலில் உள்ள விபரப்படி கடைகளின் உரிமதாரர்கள் தொடர்ந்து நடத்திட இயலாமல் திரும்ப ஒப்படைப்பு செய்தும் மேற்படி கடைகளுக்கு தாங்கள் செலுத்திய வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட கோரியுள்ளார்கள்.

| வ. எண் | உரிமம் இனம் | உரிமதாரர் பெயர் | உரிமதாரர்கள் செலுத்திய வைப்புத் தொகை ரூ | மாத வாடகை ஈடு செய்யப் பட்ட தொகை | மாத வாடகை நிலுவை தொகை ஈடு செய்யப்பட வேண்டும் | திரும்ப வழங்க வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | அண்ணா பேருந்து பழைய கடை எண் -3 | திரு.பாபு | 824000/- | 429520/ | 164080/- | 210400/- |
| 2 | அண்ணா பேருந்து நிலையம் புதிய கடை எண் -5 | திருமதி. மேனகா தேவி | 644000/- | 443965/- | 31887/- | 168148/- |

1. மேற்காணும் பட்டியலில் தெரிவித்துள்ளபடி கலம் எண் 2-இல் காணும் இனங்களுக்கு கலம் 3-இல் காணும் உரிமதாரர்கள் கலம் 4-இல் காணும் வைப்புத் தொகை செலுத்தியுள்ளார்கள். மேற்படி உரிமதாரர்களால் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய மாத வாடகை நிலுவை தொகையினை ஈடு செய்துவிட்டு கலம் 7-இல் காணும் மீதமுள்ள காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
2. கொரோனா தொற்று ஊரடங்கு காலத்தில் உள்ள வாடகையினை 5 மாதங்களுக்கு தள்ளுபடி செய்தற்கு அரசாணை எண் 337, நாள் – 16.06.2023 பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதுசமயம் மேற்படி வாடகை தள்ளுபடி செய்வதற்கான

வழக்கு மாண்பமை உச்சநீதிமன்றத்தில நிலுவையில் உள்ளத. மேறப்டி வழக்கின் தீர்ப்புரை வரப்பெற்ற பின் தீர்ப்புரையின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**அலுவலக குறிப்பு-**

அனுமதிக்காலம். கோப்பு எண்.4397/2024/அ6

**தீர்மானம் எண். 969 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

47. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.41-இல் வட்டவிளை துணை சுகாதார நிலையத்தில் சுற்றுசுவர் அமைத்து அலங்கார தரைகற்கள் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.6,20,000/-க்கு (ரூபாய் ஆறு இலட்சத்தி இருபதாயிரம்) பொது நிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு:-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/18619/2024

**தீர்மானம் எண். 970 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

48. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33-இல் கீழகோணம் சுரேஷ் ஹோட்டல் அருகே செல்லும் அனந்தனார் கால்வாயில் வடக்கு பக்கம் சுவர் உடைந்து அப்பகுதியில் அடிக்கடி விபத்துகள் நடப்பதால் அதனை சரி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3,00,000/-க்கு (ரூபாய் மூன்று இலட்சம்) பொது நிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு:-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/16013/2024

**தீர்மானம் எண். 971 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

49. இம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33-இல் உள்ள ராஜாக்கமங்கலம் சாலையில் (புன்னை நகர் அனந்தன் கால்வாய்) வரை உள்ள கழிவு நீர் ஓடையின் பக்கச்சுவர்கள் பல இடங்களில் சேதமடைந்துள்ளதால் அதனை சரி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.90,000/-க்கு (ரூபாய் தொண்ணூறாயிரம்) பொது நிதியில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு:-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/18618/2024

**தீர்மானம் எண். 972 நாள். 20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

50.நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழை 2024 முன் எச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள்

மாநகராட்சிக்குட்பட்ட வெள்ள பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளை கண்டறிந்து அப்பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால் ஓடை மற்றும் சிறுபாலங்கள் இவைகளில் தேங்கியுள்ள மண் மற்றும் சகதிகளை அப்புறப்படுத்தி மழைநீர் மிக எளிதாக சென்றிட பருவமழை முன் எச்சரிக்கை நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தி உள்ளார்கள். இப்பணியினை மேற்கொள்ள தேவையான வாகனங்கள் இம் மாநகராட்சியில் இல்லாத காரணத்தினாலும் பணியின் அவசரம் அவசியம் மற்றும் முக்கியத்துவம் கருத்தில் கொண்டு உள்ளூர் நிறுவனங்கள் மூலம் விலைப்புள்ளி கோரப்பெற்றதில் பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு

1. I.Sheeba, Jose Lorry Service, 15/77
   North street, Asaripallam
2. Renaldino Eath Movers,
   Kulathuvilai, Thengamputhoor
3. MTA Earth Movers
   Puthoor, Thicknam Coode

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டது.

| வ. எண் | விபரம் | நாள் ஒன்றிற்கு (8 மணி நேரம்) | Rate Quoted by Sheeba, Jose Lorry service, mela Asaripallam | Rate Quoted by Renaldino Eath Movers, Kulathuvilai, Thengamputhoor | Rate Quoted by MTA Earth Movers Puthoor Thicknam Coode |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | JCB | Hrs | 1200.00 | 1275.00 | 1250.00 |
| 2. | Hitachi | Hrs | 1200.00 | 1275.00 | 1250.00 |
| 3. | Hitachi33 | Hrs | 1000.00 | 1150.00 | 1100.00 |
| 4. | Lorry Rent for Hitachi | Hrs | 3000.00 | 3600.00 | 3500.00 |
| 5. | Tempo Reni | Hrs | 5500.00 | 5700.00 | 5600.00 |
| 6. | Hitachi Breaker | Hrs | 1900.00 | 2000.00 | 1900.00 |
| 7. | Tempo 3Unit | day | 6000.00 | 6400.00 | 6300.00 |
| 8. | 130/140 Hitachi | Hrs | 1900.00 | 2000.00 | 1950.00 |
| 9. | 210 Hitachi | Hrs | 2500.00 | 2700.00 | 2600.00 |

மேற்படி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை அளித்துள்ள திருமதி. Sheeba, Jose Lorry service, mela Asaripallam என்பவரது விலைப்புள்ளியினை ஏற்று பணியின் அவசர அவசியம்

மற்றும் முக்கியத்துவம் கருத்தில் கொண்டு மாமன்ற மேயரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியது மாமன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம். கோப்பு எண்.இ1/17427/2024

**தீர்மானம் எண். 973 நாள்.20.12.2024** அனுமதிக்கப்பட்டது.

- 5வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.S.V. உதயகுமார் அவர்கள் இன்று நடைபெற்ற இயல்பு கூட்டத்தின் போது வழங்கப்பட்ட விண்ணப்பத்தின்படி இயல்பு கூட்ட பொருள் வரிசை எண்.13, 39 மற்றும் 50 ஆகிய 3 பொருள்கள் மீது அன்னாரது எதிர்ப்பு பதிவு செய்யப்படுகிறது.